**23.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**24.01.2020 முதல் 02.02.2020 வரை 4 நாட்கள் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயிலில் இசை நிகழ்ச்சி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நாளை (24.01.2020) முதல் 02.02.2020 வரை பின்வரும் பல்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

1. 'சென்னை கலைத் தெரு விழா' (உரூர் ஓல்காட் குப்பம் விழா) குழு மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பின்வரும் தேதிகளில் கலை நிகழ்ச்சிகளை வழங்கவுள்ளது:

**நாளை (24.01.2020) காலை 10:00 மணி முதல் 12 மணி வரை விமான நிலையம் மற்றும் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம்**

a. ஒயிலாட்டம் - விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையம் (பொதுத்தளம்)
b. ஒத்தசெவுரு - தமிழ் ராக் பேண்ட் மற்றும் சோலோ தியேட்டர் சுனந்தா, பரத் நாராயண் குழுவினரின் கர்நாடக இசை நிகழ்ச்சி (மெட்ரோ இரயிலில் விமான நிலைய மெட்ரோ முதல் வண்ணாரப்பேட்டை மெட்ரோ வரை)
c. காலை 11:30 மணிக்கு வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தில் தேவராட்டம் மற்றும் தப்பாட்டம் (தெரு நிகழ்ச்சி)

**ஜனவரி 30, 2020 வியாழக்கிழமை மாலை 05:00 மணி முதல் 06.30 மணி வரை ஆலந்தூர் மற்றும் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம்**

a. ஆலந்தூர் மெட்ரோ முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் மாலை 05:00 மணிக்கு - அபிஷேக்கின் ஸ்டாண்ட் அப் காமெடி மற்றும் பிந்துமாலினியின் மெல்லிசை நிகழ்ச்சி
b. மாலை 05:45 மணி முதல் 06:30 மணி வரை சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில், பிரீத்தி பரத்வாஜின் பாரதநாட்டியம் மற்றும் தீபனின் பறையாட்டம் (தெரு நிகழ்ச்சி)

2. **ஜனவரி 27, 2020 மாலை 5 மணிக்கு** - குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு இசை மற்றும் நடனத்தை கற்பித்து இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்து பரப்புவதற்கான நோக்கில் செயல்பட்டு வரும் ஆன்மஜோதி என்ற அமைப்பு, கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் 'கர்நாடக குவார்டெட்' என்ற இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளது.

3. **ஜனவரி 27, 2020 மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை** - சத்தியபாமா ரோட்டராக்ட் கிளப்பின் உறுப்பினர்கள், சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து விமான நிலைய மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர்.

4. **பிப்ரவரி 2, 2020 மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை** - ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை, சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் இசை நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர். (தெரு நிலை)